பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை (11-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 237

# பொலீஸ் அதிகாரி கொலையினால் திருமலையில் நேற்று பெரும் பதற்றம்!

## தமிழ்க் கட்சிகளின் பணிமனைகள் படையினர் சுற்றி வளைத்து தேடுதல்

கொழும்பு, ஒக்ரோபர். 11

திருகோணமலை நகர்ப் பகுதியில் கடந்த செவ்வாயன்று சப்- இன்ஸ்பெக்டர் ஒருவர் இனந் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு பெரும் பதற்ற நிலைமை உருவாகி வருகிறது.

ஈ.பி.டி.பி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகளின் பணிமனைகளும் கடந்த புதன்கிழமை காலை படையினரின் திடீர் சுற்றிவளைப்புக்கு உள்ளாகின. அப் பணிமனைகளில் சட்ட விரோதமாக ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிய தேடுதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்களின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய் இரவு சப்- இன்ஸ்பெக்டர் பலியான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் திருமலை நகரில் உள்ள மாணிக்கவாசகர் வீதிச் சந்தியில் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு அயலவர்கள் வெளியே வந்தனர் என்றும் —

எவரும் வெளியே வரக் கூடாது என்று துப்பாக்கி நபர்கள் எச்சரித்தனர் என்றும் —

இதனால் உடனடியாகத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்களிடம் ஆயுதங்களை களையக் கோரி நகரில் ஊர்வலம்

### கடைகள், பாடசாலைகள் மூடப்பட்டன

கொழும்பு, ஒக். 11

திருகோணமலை நகரில் கடந்த செவ்வாயன்று இனந் தெரியாதோரால் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை ஆட்சேபித்து —

தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் திரும்பப்பெறப்படவேண்டும் என்று கோரி நூற்றுக் கணக்கான சிங்கள மக்கள் நகரில் ஊர்வலம் நடத்தினர்.

ஊர்வலம் அமைதியாக நடைபெற்றது என்றும்—

ஆனால் மற்றும் ஒரு குழுவினர் அவர்களை அச்சுறுத்தியதால் பதற்ற நிலை உருவாகியது என்றும்— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

உரிய நேரத்தில் பொலீஸார் தலையிட்டதால் குழப்பம் எதுவும் ஏற்படவில்லை என்று திருகோணமலை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எமது பணிமனை மீது பொலீஸாரே கிரனைட் வீசி; துப்பாக்கிப் பிரயோகம்

### ஈ. பி. டி. பி. உறுப்பினர் சிவதாசன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

எமது பணிமனையைச் சுற்றிவளைத்த பொலீஸார் கிரனேட் வீசி, துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்படி அவர்கள் நடந்துகொண்டிருந்தபோது அங்கு சந்தைக்கு அருகில் நின்றவர்கள் இனத்துவேசக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் திருகோணமலையில் இருந்து துரத்தப்படவேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர்.

ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் நேற்று பி. பி. ஸி சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது தற்காலிகத் தடை; அரசு பரிசீலிப்பதாகத் தகவல்

### அமைச்சர் பீரிஸ் அமெரிக்காவில் பேட்டி

வாஷிங்டன், ஒக். 11

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசாங்கம் தற்காலிகமாகத் தடை செய்யக் கூடும் என்று —

அரசமைப்பு, நீதித்துறை அமைச்சர்பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் சூசகமாகத் தெரிவித்துள்ளார்

"டெய்லி நியூஸ்" பத்திரிகைக்கு வாஷிங்டனில் [illegible] வழங்கிய விசேட பேட்டியின் போது அமைச்சர் [illegible] சொன்ன கருத்துப்படப் பதில் அளித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை இந்தியா தற்காலிகமாகத் தடை [illegible] நடவடிக்கை அரசு பரிசீலிக்கும் அணுகுமுறைகளில் ஒன்றாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 10 ஆயிரம் பேரை படையில் சேர்க்க முயற்சி

லண்டன், ஒக். 11

இலங்கை இராணுவத்துக்கு மேலும் 10 ஆயிரம் பேரை தெரிவு செய்யும் பணியை ஜனாதிபதி சந்திரிகா நேற்று ஆரம்பித்துள்ளார்.

புலிகளுடன் நடக்கும் உள்நாட்டுப்போரில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் இறந்துள்ளனர்.

இதே அளவில் படையினர் காயமடைந்துள்ளனர்.

அதிகாரப்புள்ளி விவரப்படி இதுவரை ஓடிப்போனவர்கள் எண்ணிக்கை சுமார் 10 ஆயிரம் என்று கூறப்படுகிறது.

இத்தகைய நிலையில் புதிதாக 10 ஆயிரம் பேரை படையில் சேர்க்கும் திட்டத்தை ஜனாதிபதி நேற்று ஆரம்பித்து வைத்தார் என்று பி. பி. ஸி தெரிவித்தது (இ-3)

## பூநகரியில் கண்ணிகளை அகற்றும் புலிகள்

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஒக். 11

பூநகரி முகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியதையடுத்து விடுதலைப் புலிகள் அங்கு சென்று கண்ணிவெடிகள், பொறிவெடிகள் என்பனவற்றை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருவதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

அப்பகுதியில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் இருக்கக் கூடுமாதலால் பொதுமக்கள் அங்கு செல்லக் கூடாது என்று புலிகள் கேட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## கலட்டிச் சம்பவம் குறித்து படையினர் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 11

கொக்குவிலில் (கலட்டியில்) உள்ள பாதுகாப்புப் படையினரின் முன்னணி காவலரண்கள் மீது நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் —

அரச படைகள் பதில் தாக்குதல் நடத்தி இதனை வெற்றிகரமாக முறியடித்தனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

இத்தாக்குதலின்போது பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் பொலீஸார் ஒருவர் காயமடைந்தார் என்றும் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

இந்தச் சண்டையில் புலிகளுக்குப் பலத்த சேதமேற்பட்டதாகவும் —

இரு புலிகளின் சடலங்களையும் ஆயுதங்களையும் படையினர் கைப்பற்றினர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## அடையாளம் காணப்படாத சடலங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 11

கலட்டி தடை முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலின் போது இறந்த இருவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் உள்ளதால் அவற்றை அடையாளம் காட்டி எடுத்துச் செல்லுமாறு யாழ். பொலீஸார் கேட்டுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் கைதாகி ரூ. 25,000 பிணையில்!

புதுடில்லி, ஒக். 11

இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் செண். ஹிட்ஸ் போலி ஆவண வழக்கில் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டு உடனடியாக பிணையில் விடப்பட்டார்.

இந்த வழக்கில் தலைமைப் பெருநகர் மஜிஸ்திரேட் பிரேம் குமார் பிறப்பித்த பிணையில் விடமுடியாத பிடிவிறாந்தின் அடிப்படையில் சி. பி. ஐ. அதிகாரிகள் நரசிம்மராவை அவரது இல்லத்தில் வைத்துக் கைது செய்தனர்.

எனினும் நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். கே. மகாஜன் வழங்கியிருந்த முன் பிணை அடிப்படையில் நரசிம்மராவ் உடனடியாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி புஸ்பமலர் பேரின்பநாயகம்
அவர்களின் சகோதரன்

### இராசதுரை ஜெயசிவானந்தன்
(மாணவன், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ மானிப்பாய்
சென்ற். ஆன்ஸ் றோ. க. த. க.
பாடசாலை.

(43142)

## கண்ணீர் அஞ்சலி

எமது பெரியபுலம் ம. வியின் பிரதி அதிபர்
செல்வி. அன்னலட்சுமி கந்தையா
அவர்களின் அன்புத் தந்தையார்

### இராமநாதர் கந்தையா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/பெரியபுலம் ம.வி
யாழ்ப்பாணம்.

(சி/3269)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வி
### தர்ஷியா (பபா) பரராஜசிங்கம்
(உடுவில் மகளிர் கல்லூரி 10 ஆம் ஆண்டு மாணவி)

ஜனனம்: 22 – 7 – 1981
வியோகம்: 11 – 9 – 1996
திதி: பூர்வபட்சசதுர்த்தி

இளவயதில் தந்தையை இழந்தாய்!
இழந்தாலும் ஒரு சிறிதும் குறைவின்றி
உனைக் கொழுந்தாய் வளர்த்தோமே!
கருமமெதுவும் எவர் தமக்கும்
கடுகளவும் நினைத்ததில்லை நிருபமிது
அமைவாக நினையிழுக்க இது விதியோ?

இன்று (1996 - 10 - 11) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், பெரியதாய்,
சகோதரங்கள்.

'' நந்த வில்லா ''
Dr சுப்பிரமணியம் றோட்,
சுன்னாகம்.

(43138)

## 438 பயணிகள் நேற்று வந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 11

திருகோணமலையில் இருந்து மூன்று கப்பல்களில் 438 பயணிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இக்கப்பல்களில் வந்தபயணிகள் காங்கேசன் துறையில் இருந்து அழைத்து வரப்பட்டு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு பதிவுகள் முடிந்த பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா சென்று அங்கிருந்து திருகோணமலையில் கப்பல் பெற்று வந்தவர்களே நேற்று வந்தவர்களில் அனேகமானவர்களாவர்.

இக்கப்பலில் தீவுப்பகுதிக்குச் செல்ல வேண்டிய ஒரு தொகுதி பயணிகளும் வந்திருந்தனர்.

இக் கப்பலில் 3 ஆயிரம் கோழிக்குஞ்சுகளும் எடுத்து வரப்பட்டிருந்தன. (இ-3)

## ஆஸ்திரேலியா 182 ஓட்டங்கள்

புதுடில்லி, ஒக். 11

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயான 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டி நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 73 ஓவர்களில் 182 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய சுழல் பந்து வீச்சாளர்கள் திறம்பட பந்து வீசி 8 விக்கெட்டுக்களை எடுத்தனர்.

நேற்று ஆட்டம் முடிவடைந்த போது இந்தியா தனது முதல் இன்னிங்ஸ்ஸில் 1 விக்கெட்டை இழந்து 57 ஓட்டங்களை எடுத்துள்ளது.

மொங்கியா. கங்கூலி ஆகியோர் முறையே 26,19 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதுள்ளனர்.

## நேர்முகப்பரீட்சை

வவுனியா கல்விக்கல்லூரிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சை வவுனியாவில் கடந்த மாதம் நடைபெற்றதும்—

போக்குவரத்து வசதியீனத்தால் பெரும்பாலானவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாது போனமையும்— தெரிந்தவையே. (இ-3)

## வலி, வடக்கு அடையாள அட்டை

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை விசேட அடையாள அட்டை வழங்கும் பணி நடைபெறமாட்டாது என வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

திங்கட்கிழமை தோறும் அடையாள அட்டைகள் இப்பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுவருகின்றன.

(இ-152)

உ



## உடுப்பிட்டி இமையாணன் பதியில் எழுந்தருளிய அருள்மிகு பெரியதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த சனீஸ்வரன் உற்சவம்

நாளை கடைசிச்சனி தாது வருடம் 26 ஆம் நாள் (12-10-96) காலை 9-00 மணிக்கு அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து 9-30 மணிக்கு சனீஸ்வரன் காக வாகனத்தில் எழுந்தருளுவார்.

அடியார்களின் வசதி கருதி ஆலயத்தில் எள்ளுப் பொட்டலம் வழங்கப்படும். பிற்பகல் 3-30 மணி தொடங்கி என்னெண்ணெய் எரிக்கும் வசதி வழங்கப்படும்.

அன்பர்கள், அடியார்கள் வருகை தந்து வழிபட்டு தத்தம் பாப விமோசனம் பெற்றுக் கொள்வதோடு இக்காட்சியைக் கண்டு சகல ஆசிகளையும் பெற்றுய்யுமாறும் அறியத்தருகின்றோம்.

சனீஸ்வரன் துதி

சங்கடம் தீர்க்கும் சனிபகவானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள்தாதா!

பண்டிதர் செ. சிவக்கொழுந்து
பூசகரும் ஆதீனகர்த்தரும்.

சுபமஸ்து!

(43141)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இராமநாதர் கந்தையா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பல தசாப்தங்களாக அலுவலக ஊழியராகக் கடமையாற்றிய அமரர் இ. கந்தையா அவர்களின் மரணத்தை அறிந்து கல்லூரி பழைய மாணவர் சங்கம் தனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றது.

பழையமாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(சி 3272)

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

# முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக 30 - 09 - 96 இல் மூடப்பட்ட சகல கிளைகளின் வாக்காளர் பட்டியல்களும், 11 - 10 - 96 இலிருந்து தொடர்ந்து 10 நாள்களுக்கு பார்வைக்கு கிளைகளில் வைக்கப்பட்டுள்ளன. இயங்காதிருக்கும் பின்வரும் கிளைகளான 02, 03, 14, 20, 21, 22, 24, 26, 29, 30 என்பவற்றின் வாக்காளர் பட்டியல்கள் கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்களில் வாக்காளர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் ஏனையவை அந்தந்தக்கிளைகளில் வைக்கப்பட்டுள்ளன எனவும் அறியத் தருகின்றோம்.

| இயங்காத கிளை நிலையங்கள் | பார்வைக்குவைக்கப்பட்ட கிளை நிலையங்கள் |
|---|---|
| கிளை இல. 02 சுன்னாகம் | கிளை இல. 01 சுன்னாகம். |
| ,, 03 சுன்னாகம் மேற்கு | ,, 04 கந்தரோடை |
| ,, 14 இணுவில் சந்தையடி | ,, 15 இணுவில் |
| ,, 20 குப்பிளான். | ,, 18 புன்னாலைக்கட்டுவன் தெற்கு. |
| ,, 21 ஏழாலை வடக்கு. | ,, 25 ஏழாலை மேற்கு. |
| ,, 22 ஏழாலை கிழக்கு. | ,, 23 ஏழாலை தெற்கு. |
| ,, 24 ஏழாலை. | ,, 25 ஏழாலை மேற்கு. |
| ,, 26 திடற்புலம். | ,, 19 ஈவினை, புன்னாலைக்கட்டுவன். |
| ,, 29 உடுவில் கிழக்கு. | ,, 15 இணுவில். |
| ,, 30 புன்னாலைக்கட்டுவன் வடக்கு. | ,, 19 ஈவினை, புன்னாலைக் கட்டுவன். |

செயலாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்.
10 – 10 – 96

(C/3270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும்

# ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க 33 எம். பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 11

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வந்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் பதவிக்காலத்தை நீடிக்குமாறு 33 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமற்போன பிள்ளைகளின் — பெற்றோர்களின் அமைப்பு விடுத்த கோரிக்கையின் பேரிலேயே இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தமது கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

காணாமற் போனோர் பற்றிய சுமார் 32 ஆயிரம் முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன எனவும்— இவற்றில் 8,000 முறைப்பாடுகள் தொடர்பாகவே இதுவரை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும்— அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்படாவிடின் சுமார் 23 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை ஆணைக்குழுவால் விசாரிக்க முடியாமற் போகும் எனவும்—

அனைத்து முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் முடியும்வரை ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்படாவிடின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போனோர் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்து வந்த ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இலாபம் போதாதென கூ. சங்கங்கள் முறைப்பாடு

வலி. தென்மேற்கு, ஒக். 11

வலி. தென். மேற்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குக் கிடைக்கும் இலாபப் பணம் போதாது எனக் குறிப்பிட்டு உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளன.

ஒரு கிலோ கிராமுக்கு 50 சதத்தை இலாபமாக சங்கங்கள் பெற்று வருகின்றன. ஒரு லீற்றருக்கும் இதே அளவு பணம் பெறப்படுகின்றது.

இது சங்கங்களின் செலவுக்கு — குறிப்பாக லொறிகளில் பொருள்கள் எடுத்து வந்து இறக்குவதற்கு — போதாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராமுக்கு ஒரு ரூபா வீதம் வழங்கப்பட வேண்டும் என மானிப்பாய், தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலவச நிவாரணப் பொருள்கள் விநியோகத்துக்கும் 50 சதமே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-145)

## தென்மராட்சி மாணவர்களின் அவல நிலை நீங்குமா?

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ். நகரில் உள்ள பிரபல கல்லூரிகளில் பயில்கிறார்கள். அதன் பொருட்டு நாளாந்தம் பஸ்ஸில் பயணம் செய்கின்றனர்.

இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றியதன் பின், அரசு, பேருந்துப் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்தது. யாழ். நகரில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் தூர இட மாணவர்களதும், ஆசிரியர்களினதும் வசதிக்காக, இவர்கள் கல்லூரிகளுக்குச் சிரமமின்றி சென்று வருவதற்காக பாடசாலைகளுக்கான பேருந்துச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் கண்டி வீதிக்குரிய 769 ஆம் இலக்கப் பாதைப் பாடசாலைப் பேருந்துச் சேவை ஆரம்பத்தில் சில சீராக நடைபெற்றாலும், தற்போது சில நாள்களில் சீரில்லாமலும், பல நாள்களில் நேரம் தாமதித்தும் நடைபெறுகின்றது. இதனால் பின்வரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

1) இச்சேவையில் பயணம் செய்யும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் காலதாமதம் ஆகும் போதும், தாமதமாகும் நேரத்துக்குரிய பாடங்களை இழக்க நேரிடுகின்றது.
2) சில நாள்களில் சேவை நடைபெறாவிடில் அல்லது சேவை தடைப்படின் அந்நாள்களுக்குரிய பாடங்கள் இழக்கப்படுகின்றன.
3) இச்சேவையை நம்பிப் பயணம் செய்யும் ஆசிரியர்களின் நேரதாமதம், வரவின்மையால் பாடசாலைகளுக்கு வருகை தந்துள்ள மாணவர்களுக்கான அன்றைய பாட போதனைகள் பின்னடைகின்றன.
4) கல்லூரி முடிவடைந்ததும், பேருந்து அதிக நேரம் தாமதித்துக் கல்லூரியிலிருந்து புறப்படுவதனால் மாணவர்கள் வீடு சென்றடைவதில் தாமதம் ஏற்படுகின்றது. அதிக நேரம் வீதிகளில் பேருந்துக்காகக் காத்து நிற்கும் நிலைக்குள்ளாகின்றார்கள். இது மாணவர்களைப் பல வகைகளாலும் பாதிப்படையச் செய்கிறது.

எனவே மேற்கண்ட விளைவுகள் – பாதிப்புக்களிலிருந்து மாணவர்களும், ஆசிரியர்களும் விடுபடுவதற்காக, பாடசாலைச் சேவைக்கான பேருந்துகள் கல்லூரிகளுக்குச் சென்று திரும்பும் ஒரே சீரான நேரங்களை நிர்ணயித்து,

வாசகர் திருமுகம்

அதற்கமைவாக பேருந்துகளை தவறாது பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும். ஆசிரியர்களின், மாணவர்களின் அவல நிலைகளை நீக்க, அரச பேருந்துச் சேவை அதிகாரிகளும், சாலைப் பொறுப்பாளர்களும் முன் வருவார்களா?

ப. சந்திரசேகரம்

நுணாவில் மேற்கு

## தபாலகங்களை வலிவடக்கில் இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 11

தெல்லிப்பழை, அளவெட்டி வசாவிளான் தபாலகங்களை மீளவும் வலி — வடக்குப் பகுதியில் இயங்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பதில் பிக்தி தபால்மா அதிபர் நாயகம் திரு. சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இத்தபாலகங்கள் தற்சமயம் யாழ். பிரதம தபாலகத்திலேயே இயங்கி வருவதால் இத்தபாலகத்துக்கு உட்பட்ட மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

தமது பணிகளை மேற்கொள்ள அவர்கள் யாழ்ப்பாணம் வரவேண்டியுள்ளது

இதைத் தொடர்ந்து தெல்லிப்பழை தபாலகத்தை மல்லாகம் பகுதியிலும், வசாவிளான் தபாலகத்தை புன்னாலைக்கட்டுவன் பகுதியிலும், அளவெட்டி தபாலகத்தை அளவெட்டி பகுதியிலும் இயக்க வைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

### பரீட்சை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடம் தோறும் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் இந்து சமயப் பரீட்சைகள் இவ்வாண்டும் நடத்தப்படவிருக்கின்றன.

இந்தப் பரீட்சை தொடர்பான விவரங்கள் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும்-

பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளை நடத்தும் இந்து சமய நிறுவனங்கள் தங்கள் பகுதி பிரதேச செயலரிடமிருந்து விவரங்களைப் பெற்று விண்ணப்பங்களை உடன் தமக்கு அனுப்புமாறும் இந்து சமய கலாசார அலுவல்கள் உதவிப் பணிப்பாளர் திரு. ஆ மாகாலிங்கம் கேட்டுள்ளார்.

# படையினர் வாகனத்துக்குள் ஏறி சோதனையிடும் நடைமுறை வேண்டும்

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கோருகிறார்

பொலன்னறுவை — மட்டக்களப்புப் பயணத்தின் போது மக்கள் கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டி உள்ளது.

50 மைல்கள் கடப்பதற்குள் 20 சோதனை நிலையங்களில் அவர்கள் இறங்கி ஏற வேண்டும். சோதனை நிலையங்களில் இறங்கி ஏறும் நடைமுறையை நிறுத்தி வாகனங்களுக்குள் படையினர் ஏறி சோதனையிடும் நடைமுறை அமுல் செய்யப்பட வேண்டும்.

அஞ்சல் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் எம். எல். எம். ஹிஸ்புல்லா நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

பத்து வருடங்களுக்கு அதிகமாக நாடாளுமன்றம் அவசர காலச் சட்டத்தை விவாதித்து வருகிறது.

எதிர்க்கட்சியினரும், அரசாங்கத் தரப்பினரும் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும்.

இலட்சக்கணக்கான மக்கள் இன்று அகதிகளாகி விட்டனர்.

இழக்கு மாகாணத்தில் அமைதியாக இருந்த பிரதேசங்கள் அங்கிருந்து பாதுகாப்புப் படையினரால்விடுவிக்கப்பட்ட பின்னர் அமைதி இழந்து வருகின்றன.

பொலன்னறுவை எல்லைப் பகுதிக்கும், கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு தண்ணீர் தாங்கி

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் நிலவும் குடி தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தண்ணீர் தாங்கி ஒன்றை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்கியுள்ளது.

கடந்த வாரம் அங்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் அங்கு நிலவும் குறைபாடுகளைத் கேட்டறிந்தனர்.

புங்குடுதீவுப் பகுதிக்கும் விஜயம் செய்த இக் குழுவினர் அங்குள்ள வைத்தியசாலைக்கும் சென்றனர். (இ-3)

## 'தவம்' கிடக்கும் பயணிகள்

கொழும்பு செல்லும் பயணிகள் சுமார் இரண்டாயிரம் பேர் தாண்டிக்குளம் தடுப்புக் காவல் நிலையத்தின் அனுமதி கிடைக்காமல் ஓமந்தைப் பகுதியில் 'தவம்' கிடப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

இந்தப் பயணிகள் நாள் முழுவதும் வரிசையில் காத்து நின்றாலும் நாளொன்றுக்கு அதிக பட்சம் 25 பேரையே உள்ளே செல்ல இராணுவம் அனுமதிப்பதாகவும்—

வெளிநாடு செல்ல வேண்டிய பயணிகள் பலர் வீஸா, டிக்கெட் போன்றவை காலாவதியான நிலையில் அவதியுறுவதாகவும்—

அச்செய்தி நிறுவனம் தெரிவித்தது.

யாழ். குடாநாட்டிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொழும்பு செல்ல அனுமதியோ, வழியோ கிடைக்காமல் ''தவம்'' கிடப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## சிரிக்கிறாள் நில அன்னை

'நிலம் என்னும் நல்லாள் நகும்' என்று வள்ளுவர் கூறியுள்ளார் நாமெல்லோரும் பங்கீட்டரிசியையும், இறக்குமதி அரிசியையும் எதிர்நோக்கி இருப்பதைப் பார்த்து நிலம் சிரிக்கிறது. ஏன் இந்த வறுமை என்று எங்களை ஏளனம் செய்கிறது!

முற்காலத்தில் மன்னர்கள், மந்திரிகள், சேனாதிபதிகள், புலவர்கள் முதலானோர் வயலில் இறங்கி மக்களோடு மக்களாக ஏர்பூட்டி விழாக்கொண்டாடித் தானிய விளைவு கண்டார்கள். வானம் பொழிய வேண்டும், பூமி விளைய வேண்டும் என்று புலவர்கள் பாடினார்கள்.

மன்னர்கள் முன்னின்று மக்களை ஊக்குவித்தார்கள். மக்கள் நல்ல நாளில் தேங்காயுடைத்து வழிபட்டு வயலில் இறங்கினார்கள். மன்னர்களே தங்கள் கையால் ஏரைப் பிடித்து உழுது விழாவை ஆரம்பித்தார்கள்.

மன்னர்களே குளந்தோண்டும் பணியிலும் முன்னின்றார்கள். அணைக்கட்டு விழா, நடுகைவிழா, அறுவடைவிழா முதலியனவும் செய்தார்கள். மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனைகட்டிப் போரடித்தார்கள். அன்று சேனையினரே போரடிக்க உதவி செய்தனர்.

முன்வைத்த காலைப் பின்வைத்தலாகாது. ஒரு முறை விளைவு குன்றினால் மறுமுறை விளையும். எனவே எம்மவர் ஏரைக் கைவிடலாகாது. இளைஞர் தம் ஆற்றலை விளைவிற் காண்பித்தல் நல்லது. அதற்கான சகல உதவி, ஊக்கத்தை வழங்க வேண்டியது ஆட்சியில் எவர் இருந்தாலும் அவர்கள் தலையாய கடமை.

நிலத்தை உழுது, விதை விதைத்து, நீர்பாய்ச்சி உணவு பெறுவதற்கு உள்ள சகல தடைகளும் நீக்கப்பட வேண்டும். நாடு செழிக்க அதுவே நல்வழி.

தொகுப்பு: க. கனகராசா

போலியோவைத் தடுக்கச் சொட்டு மருந்து!
உங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள விசேட நிலையங்களுக்கு
5 வயதுக்குக் குறைந்த உங்கள் பிள்ளைகளை
அழைத்துச் செல்லுங்கள்!
நாளை சனிக்கிழமையை மறவாதீர்கள்!
PolioPlus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை தணிக்கையால் நஷ்டமடைந்தது அரசே!

## யுத்தம் பற்றிய உண்மை நிலையைக் கூறி இருந்தால் தீர்வு குறித்து சாதகமான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கும்

*ஸ்ரீலங்காவில் இதுவரை அமுலில் இருந்த யுத்தம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அகற்றப்பட்டதாக கடந்த செவ்வாய்க்கிழமை பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பாக `சண்டே ரைம்ஸ்'' இராணுவச் செய்தியாளர் இக்பால் அத்தாஸுடன் பி.பி.சி சிங்களச் சேவை மேற்கொண்ட தொலைபேசிப் பேட்டியின் தமிழாக்கத்தைத் தருகிறோம்*

**தொகுப்பு: கஜனி**

கேள்வி: தற்போது யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை வாபஸ் பெறப்பட்டுள்ளதே!

பதில்: கடந்த வாரம் பிரதி பாதுகாப்பு அமைச்சர், தற்போதைக்கு பத்திரிகைத் தணிக்கையை மீளப்பெறப் போவதில்லை எனத் தெரிவித்திருந்தார். ஆனால் அவர் அவ்வாறு கூறி ஒரு கிழமை ஆவதற்குள் பத்திரிகைத் தணிக்கையை உடனடியாக நீக்குவதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பத்திரிகையாளர்கள் சண்டை நடைபெறும் இடங்களுக்குச் சென்று தகவல் சேகரிப்பதற்கு இருந்த தடை இன்னும் நீக்கப்படவில்லை.

ஒரு சிறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது அதாவது யுத்தப் பிரதேசத்துக்கு பத்திரிகையாளர் செல்ல விரும்பினால் அதுபற்றி விண்ணப்பிக்கலாம். அதுபற்றி அரசு முடிவெடுக்கும். இருப்பினும் எல்லோருக்கும் இந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதுவரை இரண்டு அல்லது மூன்று பத்திரிகையாளர் குழுக்களே யுத்த முனைகளுக்குச் சென்றுள்ளன. குறிப்பாக ரூபவாஹினிக் குழுவினர் சென்று வந்துள்ளனர்.

கேள்வி: தணிக்கைக்குள்ளான செய்திகள் மீண்டும் பிரசுரமாகும் போது அவ்வாறு செய்திகள் வெளிவருவது பிரதிபாதுகாப்பு அமைச்சருக்கு பயன்தருவனவாக அமையாதல்லவா? அப்படியான ஒரு சூழ்நிலையில் தணிக்கையை நீக்குவதற்கு ஏன் முடிவு எடுக்கப்பட்டது.

பதில்: அதுதான் எல்லோருக்கும் புதுமையாக உள்ளது. ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் அமைப்பு பாரிஸ் நகரில் உள்ளது. அந்த அமைப்பு வருடாந்தம் ஸ்ரீலங்காவுக்கு உதவிகளை வழங்கி வருகிறது. அந்த அமைப்பின் கூட்டம் அடுத்த மாதம் பாரிஸில் நடைபெறவுள்ளதால் பத்திரிகைத் தணிக்கை வாபஸ் பெறப்பட்டது என மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகிறது.

பத்திரிகைத் தணிக்கை நடைமுறையில் இருந்த காலத்திலேயே இராணுவத்திற்குப் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலாகும். இத்தாக்குதல் பற்றி இன்றுவரை விவரங்கள் கிடைக்கவில்லை. அந்த முகாமில் இருந்த படையினரில் எத்தனைபேர் உயிர் தப்பினர்? எத்தனைபேர் கொல்லப்பட்டனர்? அள்ளிச் செல்லப்பட்ட ஆயுதங்களின் தொகை எவ்வளவு? எப்படி இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது? ஆகிய விவரங்கள் ஒரிரு கிழமைக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் செய்தித்தணிக்கை அமுலில் இருந்ததால் அந்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

கேள்வி: செய்தித் தணிக்கையால் அரசுக்கு என்ன பயன் கிடைத்தது?

பதில்:- எனது தனிப்பட்ட கணிப்பின்படி அரசாங்கத்துக்கு கிடைத்தலாபங்களிலும் பார்க்க அதிக கஷ்டங்களே உருவாகியுள்ளன. குறிப்பாக தற்போது சமாதானத்தை ஏற்படுத்த ஓர் அரசியல்

( 7ஆம் பக்கம் பார்க்க)

### பஸ்சேவை இல்லாததால் பாதிப்பு

வடமராட்சி, ஒக்.11

பருத்தித்துறையிலிருந்து மருதங்கேணிக்கு காலை நேரத்தில் பஸ் சேவை இல்லாததால், மருதங்கேணிப் பகுதிக்குச் செல்லும் அரச ஊழியர்கள் பெரிதும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

குடத்தனை, நாகர்கோவில் செம்பியன்பற்று மருதங்கேணி ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அங்குள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள் ஆகியோர் பருத்தித்துறையிலிருந்து காலை நேரத்தில் கடமைக்குச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

(இ-173)

### நிறுவைகள் அளவைகளுக்கு முத்திரை

யாழ். செயலகத்தில் இயங்கும் நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பிரிவில் கடந்த புதன் கிழமை முதல் நிறுவைகள் அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

யாழ். நகரிலுள்ள வர்த்தகர்கள் ப.நோ.கூ. சங்கங்கள் என்பன தங்கள் நிறுவை அளவை உபகரணங்களை எடுத்து வந்து முத்திரையிட்டுச் செல்லுமாறு அத் திணைக்கள ஆணையாளர் கேட்டுள்ளார். (இ-100)

# தேவ கௌடா உறுதி அளித்தால் இரகசியத்தை வெளியிடத் தயார்!

## மூலிகைப் பெற்றோலைக் கண்டுபிடித்த ராமர்பிள்ளை அறிவிப்பு

*தமிழக விவசாயியான ராமர்பிள்ளை மூலிகையிலிருந்து பெற்றோல் கண்டு பிடித்திருப்பதாக தெரிவித்திருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. இது ஒரு வெறும் ''ஹம்பக்'' என்கின்றனர் இந்திய விஞ்ஞானிகள்.*

*ஆனால் உண்மையை வெளியிட்டால், வெளிநாடுகளுக்கும் அது தெரிந்து விடும் என்கிறார் ராமர்பிள்ளை.*

*பிரதமர் தேவ கௌடா உறுதி அளித்தால் மூலிகைப்பெற்றோல் குறித்த இரகசியத்தை வெளியிடத் தாம் தயார் என்று அவர் தற்போது கூறுகிறார்.*

பிரதமர் தேவகௌடா உறுதி அளித்தால் மூலிகையிலிருந்துபெற்றோல் தயாரிக்கும் இரகசியத்தை வெளியிடத் தயார்.

இப்படி. ராமர்பிள்ளை கூறி உள்ளார்.

தமிழ்நாடு, ராஜபாளையத்தைச் சேர்ந்தவர் ராமர் பிள்ளை, டில்லியில் விஞ்ஞானிகள் முன்பும், சென்னையில் தமிழக முதல்வர் கருணாநிதி முன்பும், ஹைதராபாத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு முன்பும் மூலிகையிலிருந்து பெற்றோல் தயாரித்துக் காட்டினார்.

தனது மூலிகைப் பெற்றோல் தயாரிப்புக்கு அவர் 'காப்புரிமை' கோரினார். ஆனால் மூலிகைப்பெற்றோல் குறித்து விஞ்ஞானிகள் சந்தேகங்களை எழுப்பினர். ராமர்பிள்ளை கூறிய விளக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவருக்கு காப்புரிமை அளிக்கப்படவில்லை

ஹைதராபாத்தில் ஆந்திர முதல்வர் முன்னிலையில் மூலிகைப் பெற்றோலை செய்து காட்டிய பின் ராமர் பிள்ளை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

எனது மூலிகைப் பெற்றோல் தயாரிப்பின் மீது எனக்கு அபரிமிதமான நம்பிக்கை உள்ளது. என்னால் 10 நிமிடத்தில் இப்போதும் மூலிகைப் பெற்றோல் தயார் செய்து கொடுக்க முடியும். டில்லியில் உள்ள ஐ ஐ டி. நிறுவனத்தில் 5 முறை பல அதிகாரிகள் முன்னிலையில் மூலிகைப் பெற்றோல் தயாரித்து காட்டி இருக்கிறேன்.

சென்னையில் முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் தெளிவாக பெற்றோல் தயார் செய்து அதை ஒரு செய்தியாளரின் டி. வி. எஸ் 50 மொபட்டிற்கு பயன்படுத்தி இயக்கி காட்டினேன்.

சென்னை ஐ. ஐ டி. யில் இருந்து எனக்கு கடந்த 24 ஆம் திகதி திடீரென ஓர் அழைப்பு வந்தது. தில் 25 ஆம் திகதி மாலை 3 மணிக்கு அதிகாரிகள் முன்னிலையில் செயல் முறை செய்துகாட்ட கூறி இருந்தனர். நான் உடனே சென்னை புறப்பட்டு சென்றேன்.

அங்கு திடீரென என்னை 25 ஆம் திகதி காலை 11 மணிக்கே பெற்றோல் தயாரித்து காட்டக் கூறினார்கள். அதன்படியே நான் காலை 11 மணிக்கு மூலிகைப்பெற்றோல் செய்து காட்டினேன்.

அப்போது என்னை அறியாமல் ஏதோஓர் இரசாயனப் பொடி, மூலிகைப் பெற்றோல் தயாரிக்கும் கலவைக்குள் கலந்து விட்டதாக கருதுகிறேன். அதனால்தான் சிக்கல் ஏற்பட்டுவிட்டது.

### இரசாயனப்பொடி

அங்கு செய்முறை சோதனை நடந்த போது எனது மூலிகைச் செடிகள் மற்றும் பொருள்களை அதிகாரிகள் வாங்கி பார்க்கவில்லை. அவற்றை நான் பயன்படுத்தியபோது அதன் எடை அளவுகளை மட்டும் குறித்துக்கொண்டனர். இரசாயன கலவைப்பொடியை நான் பயன் படுத்தியபோது அது என்ன? எப்படி உருவாக்கப் பட்டது? என்று கேட்டனர். ஆனால் அதைச் சொல்ல முடியாது என்று நான் மறுத்து விட்டேன்.

அந்த இரசாயனப்பொடியை தயாரிக்கும் முறையை நான் சொன்னால் அது விரைவாக வெளிநாடுகளுக்கும் பரவி விடும். தற்போது வெளிநாட்டுக்காரர்கள் நமது நாட்டின் வேம்பு, மஞ்சள் போன்றவற்றை பயன்படுத்தி மருந்துகள் தயாரிப்பது போல் இந்த மூலிகையையும் பயன்படுத்தி விடக் கூடும்.

மேலும் சென்னையில் செய்முறை சோதனை நடந்த போதுமூலிகைச்சாறும் இரசாயனப் பொடியும் சேர்ந்து பெற்றோலாக எப்படி மாறுகிறது? என்று என்னிடம் கேட்டார்கள். என்னால் விஞ்ஞான ரீதியாக அதை விளக்கிக் கூறமுடியாது.

மூலிகைப் பெற்றோலைத் தயாரித்துத்தான் காட்ட முடியும். அனுபவ பூர்வமாக மட்டுமே அதைச் செய்து காட்ட முடியும். நான் 10 ஆம் வகுப்பு வரை தான் படித்து இருக்கிறேன். மூலிகைச்சாறும் இரசாயனப் பொடியும் சேர்ந்து பெற்றோலாக எப்படி மாறுகிறது என்பதை வேதியியல் முறையில் விளக்கம் கொடுக்க என்னால் முடியாது. ஆனால் அதிகாரிகள் அதையே மீண்டும் மீண்டும் என்னிடம் கேட்டு என்னை குழப்பமடையச் செய்யவே முயன்றனர்.

கடைசியாக நான் என்னென்ன பொருள்களைச் சேர்த்து மூலிகைப் பெற்றோல் தயாரித்து இருக்கிறேன் என்று அதிகாரிகள் கேட்டனர்.

அதைச் சொல்ல முடியாது என்று திட்டவட்டமாக மறுத்து விட்டேன். அதைச் சொன்னால் எனக்குப் பாதுகாப்பு இருக்காது.

நான் இந்திய விஞ்ஞானிகளுக்கும் உலக விஞ்ஞானிகளுக்கும் சவால் விடுகிறேன். ரூபா ஒரு இலட்சம் பந்தயம் கட்டி 10 நிமிடத்தில் எல்லோருடைய முன்னிலையிலும் மூலிகைப் பெற்றோலை தயாரித்து காட்டுகிறேன். ஆனால் விஞ்ஞான ரீதியாக விளக்கம் அளிகக என்னால் முடியாது.

இனிமேல் யார் என்ன சொன்னாலும் என் வேலையை நான் தொடர்ந்து செய்வேன். என் மூலிகைப் பெற்றோல் தயாரிப்பை எவராலும் தடுக்கமுடியாது. இன்னும் 2 வாரத்தில் திட்டமிட்டபடி வேண்டிய உபகரணங்களை தயாரித்துக் கொண்டு மூலிகைப் பெற்றோல் உற்பத்தியை தொடங்க இருக்கிறேன்.

சாதாரண ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் மூலிகைப் பெற்றேலை விற்பனை செய்வேன். மத்திய அரசு எனக்கு பெற்றோல் தயாரிக்க அனுமதி தராவிட்டாலும் மக்களுக்காக நான் மூலிகைப் பெற்றோலை உற்பத்தி செய்து விற்பனை செய்வேன். அதற்குத்தேவைப்படும் மூலிகைகளை அதிக அளவு உற்பத்தி செய்யவும் ஏற்பாடு செய்யப் போகின்றேன்.

நான் எத்தனையோ முறை மூலிகைப் பெற்றோல் தயாரித்து இருக்கிறேன். அதில் எப்போதும் தவறு ஏற்பட்டது இல்லை. விண்வெளி ஆராய்ச்சிக்கு பல கோடி ரூபா செலவு செய்து ராக்கெட் தயாரித்து அனுப்புகிறார்கள். அது தோல்வி அடைந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் கடலில் போய் விழுந்து விடுகிறது. அந்த ராக்கெட்டை தயாரித்த விஞ்ஞானிகளை அரசு கைவிட்டு விடுவதில்லை. அவர்களை உற்சாகப்படுத்தி மீண்டும் ராக்கெட் தயாரிக்க உதவி செய்கிறது.

அதுபோல் எனக்கும் மீண்டும் மூலிகைப் பெற்றோல் தயாரித்துக்காட்ட சந்தர்ப்பம் கொடுத்தால் எல்லோருடைய முன்னிலையிலும் செய்துகாட்டத் தயார். ஆனால் அந்தப் பரிசோதனையை எனது இடத்தில் இருந்துதான் செய்து காட்டுவேன். யார் எங்கே அழைத்தாலும் செல்லமாட்டேன்

எனது கண்டு பிடிப்பு நாட்டின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் அதை நாட்டுக்கே அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன். எனவே மத்திய அரசு எனது கண்டுபிடிப்புக்கு 'பேடண்ட்' உரிமை வழங்க மீண்டும் ஆலோசனை செய்யவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. செயலாளர் பதவி குறித்து வல்லரசுகளிடையே இழுபறி நீடிப்பு

## பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு பிரான்ஸும் ஆதரவு

பாரிஸ், ஒக். 11

ஐ. நா. பொதுச் செயலாளர் பதவி குறித்து வல்லரசுகளிடையே தொடர்ந்து இழுபறி நிலவி வருகிறது.

தற்போதைய பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் பதவிக்காலம் முடிவடைகிறது. ஆனால் அவர் அடுத்த தவணைக்கும் பதவி வகிப்பதற்கு போட்டியிட முடிவு செய்துள்ளார்.

பூட்ரஸ் பூட்ரஸ்காலி மீண்டும் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்படுவதை அமெரிக்கா வன்மையாக எதிர்க்கிறது. அதே சமயம் ஐ. நா. பாதுகாப்புச்சபையில் உள்ள ஐந்து உறுப்பு நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் பூட்ரஸ் பூட்ரஸ் காலியை ஆதரிக்கிறது.

ஐ. நா. பொதுச் செயலாளர் தெரிவு விடயத்தில் அமெரிக்கா தனக்கு இசைவான ஒருவரை திணிக்க முயலுமானால் அதனை தான் ''வீட்டோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி முறியடிக்கப் போவதாக பிரான்ஸ் எச்சரித்துள்ளது.

ஐ நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா ஆகியவை ''வீட்டோ'' அதிகாரம் உள்ள ஏனைய நிரந்தர உறுப்பு நாடுகள் ஆகும்.

பூட்ரஸ் பூட்ரஸ் காலி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரது தெரிவை செல்லாதது ஆக்குவோம் என அமெரிக்கா மிரட்டியுள்ளது குறித்து பத்திரிகையாளர்கள் பிரெஞ்சு அமைச்சர் ஜாக் கொட்பேனிடம் கேட்ட போது, ''வீட்டோ உரிமை அமெரிக்கர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் இருக்கிறது என்பதை அவர்கள் உணரவேண்டும்'' எனத் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவும் பூட்ரஸ் பூட்ரஸ்காலிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் வெற்றிக்கு ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை திரட்டப் போவதாகவும் மண்டேலா தெரிவித்துள்ளார். (இ-10)

## கிளின்ரன் மீது பொப்டோல் கண்டனம்

ஹார்ட்போர்ட் ஒக். 11

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பாகப் போட்டியிடும் பொப்டோல் ஜனாதிபதி பில் கிளின்ரனின் வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டித்துள்ளார்.

வரலாற்றில் இல்லாதவாறு ஜனாதிபதி கிளின்ரன் வெளிநாடுகளுக்கு கூடுதலான அமெரிக்கப் படையினரை அனுப்பி உள்ளார் என்று பொப்டோல் குற்றஞ் சாட்டி உள்ளார். (இ)

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், ஒக். 11

ஆப்கானிஸ்தானில் மகளிர் உரிமைகள் மதிக்கப்பட்டாலன்றி தலிபான் நிர்வாகத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்காது என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தலிபானுடன் தொடர்புகளை அமெரிக்கா நாடும். ஆனால் பெண்களின் பணிக்கும், கல்விக்கும் எதிரான உத்தரவுகள் ஆப்கானைத் தனிமைப்படுத்திவிடும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி நிகலஸ் பேண்ஸ் தெரிவித்தார். (இ-10)

# சிலுக்கு சுமிதாவின் சொத்துக்குச் சண்டை

சென்னை ஒக். 11

சில வாரங்களுக்கு முன்பு கவர்ச்சி நடிகை சிலுக்கு சுமிதா தற்கொலை செய்து கொண்டார் அல்லவா? சிலுக்கு சுமிதாவுக்கு சொந்தமாக ரூ. 25இலட்சம் வரை பணம், நகை, சொத்து இருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சொத்துக்களுக்கு 3 பேர் போட்டி போடுகின்றனர்.

சிலுக்கு சுமிதாவுடன் வாழ்ந்த டாக்டர் ராதாக் கிருஷ்ணன், சிலுக்கு சுமிதாவின் அம்மா நரசம்மா, சிலுக்கு சுமிதாவை வளர்த்து ஆளாக்கிய அன்னபூரணி ஆகியோர் தங்களுக்கே சொத்துக்கள் சேரவேண்டும் எனக் கூறுகின்றனர்.

இவர்கள் 3 பேரும் சொத்துப்பிரச்சினை பற்றி வீட்டில் வைத்துப் பேசினர். ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. இதனால் டாக்டர் மீது நரசம்மாவும், நரசம்மா மீது டாக்டரும் முறைப்பாடு கொடுப்பதற்காக விருப்பாக்கம் பொலீஸ் நிலையம் சென்றனர்.

பொலிஸ் நிலையம் முன்பு டாக்டருடன் வந்தவர்களுக்கும், நரசம்மாவுடன் வந்தவர்களுக்கும் இடையில் சண்டை மூண்டது. பொலிசார் தலையிட்டு இருதரப்பினரையும் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பிவைத்தனர். (இ- 10)

## உலக அரங்கில்

# அழகு ராணிப் போட்டிக்கு அதிரடிப்படை பாதுகாப்பு

பெங்களூர், ஒக். 11

தென்னிந்திய மாநிலமான கர்நாடகத்தின் தலைநகர் பெங்களூரில் அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக அழகுராணிப் போட்டிக்கு விசேட அதிரடிப் படை கமாண்டோக்கள் பாதுகாப்பு அளிக்கவிருக்கின்றனர்.

அத்துடன் வன்முறை, ஆர்ப்பாட்டங்களைத் தடுக்க ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட விருக்கின்றனர்.

இந்த உலக அழகு ராணிப் போட்டி நடைபெறும் மைதான அரங்கை தீயிடப் போவதாக விவசாயிகள் சங்கத் தலைவர் நஞ்சுண்டசாமி அறிவித்துள்ளதை அடுத்தும் —

பெங்களூர் மகளிர் அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதை அடுத்தும் — பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதுவித அசம்பாவிதமும் இன்றி போட்டி நடக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் —

பல்வேறு நாடுகளில் இருந்து வரும் அழகிகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் — பொலிஸ் ஆணையாளர் தெரிவித்தார். (இ-3)

# ரூ. 100 கோடி செலவில் கட்டப்பட்ட ஜெயலலிதாவின் சொகுசு பங்களா!

தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராகப் பல்வேறு ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்கு விசாரணைகளை அவர் எதிர்நோக்கி இருக்கிறார் அல்லவா?

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஹைதராபாத்தில் செல்வி ஜெயலலிதாவுக்குச் சொந்தமான சொகுசு பங்களா குறித்து இக் கட்டுரை ஆராய்கிறது.

ஜெயலலிதாவுக்கு சொந்தமான ஹைதராபாத்தில் உள்ள திராட்சைத்தோட்டத்தின் நடுவில் ரூ. 100 கோடியில் சொகுசு பங்களா கட்டப்பட்டுள்ளது.

இந்த பங்களாவில் 35 அறைகளில் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டு உள்ளன, பங்களாவின் நடுவில் பளிங்குக்கற்களால் ராஜதர்பார், நவீன நீச்சல்குளம், தானியங்கி நீரூற்று வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த சொகுசு பங்களாவை வீடியோ படம் எடுக்க முயன்ற பொலீசாருக்கு அடி-உதை விழுந்துள்ளது.

ஜெயலலிதா முதலமைச்சராக பதவி ஏற்றதும் மாதம் ஒரு ரூபா சம்பளம் வாங்குவேன் என்று அறிவித்தார். ஆனால் கோடி கோடியாக சொத்துக்களை வாங்கி குவித்து உள்ளார் என்று லஞ்ச ஒழிப்பு பொலீஸாருக்கு ஏராளமான முறைப்பாடுகள் வந்தன.

இதனால் லஞ்ச ஒழிப்பு பொலீஸார் ஜெயலலிதாவின் ஊழல் சொத்துக்களைப்பற்றி தீவிரமாக விசாரித்து வருகிறார்கள்.

ஜெயலலிதாவுக்கு சொந்தமாக ஆந்திரமாநிலம் ஹைதராபாத்தில்உள்ளதிராட்சைத் தோட்டத்தில் ரூ.100 கோடி மதிப்பில் சொகுசு பங்களா கட்டி இருப்பது பற்றி தகவல் கிடைத்தது. இதனால் லஞ்ச ஒழிப்பு பொலீஸார் ஹைதராபாத்துக்கு விரைந்து சென்றனர்.

ஹைதராபாத்துக்குச்சென்ற லஞ்ச ஒழிப்பு பொலீஸார் மாறுவேடங்களில் ஜெயலலிதாவின் திராட்சைத் தோட்டத்துக்கு சென்றனர். அந்த திராட்சைத் தோட்டம் பல ஏக்கரில் உள்ளது.

திராட்சைத் தோட்டத்தின் நடுவில் 10 ஏக்கரில் பல ஆயிரம் சதுர அடி பரப்பில் நவீன வசதிகளுடன் சொகுசு பங்களா கட்டப்பட்டு உள்ளது. இந்த சொகுசு பங்களாவில் பல்வேறு ஆடம்பர வசதிகளுடன் 35 அறைகள் தனித்தனியாக கட்டப்பட்டு 25 அறைகளில் மட்டும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டு உள்ளது.

ஜெயலலிதா தங்குவதற்காக மட்டு 3 அறைகள் நவீன வசதிகளுடன் உள்ளன. இந்த அறைகளையொட்டி நீச்சல் குளம் உள்ளது. இந்த நீச்சல்குளத்தில் குளிப்பவர்களை மற்றவர்கள் பார்க்க முடியாது. ஆனால் நீச்சல் குளத்தில் குளிப்பவர்கள் மட்டும் வெளியில் உள்ளவர்களைப் பார்க்கலாம். அதற்கான கண்ணாடிகள் பொருத்தப் பட்டுள்ளன.

ராஜதர்பார்

பங்களாவின் நடுவில் பழங்கால அரசர்கள் நீதி வழங்கும் போது அமரும் ராஜதர்பார் போன்ற வடிவில் பெரிய மண்டபம் உள்ளது.

இந்த தர்பாரை 100x100அடியில்கட்டி உள்ளனர். ராஜதர்பாரில் நடக்கும் நிகழ்ச்சிகளைகாண பெரிய பெரிய மாடங்களும் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த ராஜதர்பார் அனைத்தும் ஜெய்ப்பூர் பளிங்குக்கற்களால் கட்டப்பட்டு உள்ளன.

பங்களாவுக்கு வெளியில் தானியங்கி இசை நீரூற்றும், டில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையை சுற்றி அமைக்கப்பட்டுள்ள மொகால் ரோஸ் கார்டனை போன்று இங்கும் மொகால் ரோஸ் கார்டனும் உள்ளன.

இந்த ஆடம்பர பங்களாவையொட்டி உயரமான. ''காம்பவுண்ட்'' சுவர்கள் எழுப்பப்பட்டு உள்ளன. இந்த ''காம்பவுண்ட்'' சுவரை யொட்டித்தான் திராட்சைத் தோட்டம் உள்ளது.

''திராட்சைத் தோட்டத்தை சுற்றி நாலா புறங்களிலும் 12 அடி உயரத்தில் இரண்டாவது ''காம்பவுண்ட்'' சுவரும் கட்டப்பட்டு இருக்கிறது.

ஜெயலலிதா கட்டி உள்ள சொகுசு பங்களா முழுவதும் பல்வேறு இடங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு உள்ளன.

ஒவ்வொரு அறைகளிலும் கண்ணைக்கவரும் வகையிலான மின் விளக்குகள் அலங்காரமாக தொங்கவிடப்பட்டு பஞ்சு மெத்தைகளிலான மெத்தைக் கட்டில்கள் போடப்பட்டுள்ளன.



ஜெயலலிதா

சுழலும் மெத்தை வசதி

ஜெயலலிதா தங்கும் 3அறைகளில் ஓர் அறையில் மட்டும் சுழலும் மெத்தை வசதி உள்ளது. பங்களாவைச் சுற்றி 4 இடங்களில் இராட்சத மின் விளக்கு வசதிகளும் செய்யப்பட்டு இருக்கின்றன.

இந்த பங்களாவுக்கு தானியங்கி மின்சார ஜெனரேட்டரும் உள்ளது. இந்த ஜெனரேட்டர் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்டதாகும். இந்த பங்களாவுக்குள் ஒரு சில கதவுகள் சந்தனக் கட்டையால் செய்யப்பட்டு போடப்பட்டுள்ளன. மற்றக் கதவுகளை காரைக்குடி செட்டி நாட்டுக்காரர்கள் வீடுகளில் இருக்கும் கதவுகள் போல் போட்டுள்ளனர்.

இந்த சொகுசு பங்களாவை லஞ்ச ஒழிப்பு பொலீஸார் கண்காணித்து முழு விவரங்களையும் சேகரித்து வந்தனர். திராட்சை தோட்டம்சொகுசு பங்களாவை வீடியோ படம் எடுக்க முயன்றனர். அப்போது திடீரென்று வந்த 5 பேர் வீடியோ படம் எடுத்தவர்களிடம் தகராறு செய்து தாக்கி விட்டு ஓடிவிட்டனர்.

இந்த பங்களாவில் 25 பேர் வேலைபார்த்து வருகிறார்கள் இவர்களில் பெரும்பாலானோர் தஞ்சை மாவட்டம் மன்னார்க் குடியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இப்போது லஞ்ச ஒழிப்பு பொலீஸார் ஜெயலலிதாவின் பங்களாவைச் சுற்றிமுற்றுகையிட்டு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள் ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் வருகை குறித்து இந்தியா பொறுப்புடன் நடக்க வேண்டும்

## தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 11

இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் செல்வதைப் பலாத்காரமாக தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்து, இந்த விடயத்தில் இந்தியா தார்மீகக் கடமையுணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

— மேற்கண்டவாறு தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவிடம் வலியுறுத்த விருக்கின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் இம்மாத இறுதியில் இலங்கை வரும் போது அவரைச் சந்தித்து இதுபற்றி வலியுறுத்த தமிழ்க் கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன.

"இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்படும் வரை — சமாதானம் ஏற்படும் வரை — அகதிகள் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளிவைக்க முடியாது எனவே அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் விடயத்திலேயே இந்தியா கவனம் செலுத்த வேண்டும்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா நீண்டகாலமாக தொடர்பு கொண்டிருக்கிறது. இந்திய — இலங்கை ஒப்பந்தமும் இதன் வெளிப்பாடுதான். ஆகவே அகதிகள் பிரச்சினையில் இந்தியா தார்மீகக் கடமையோடும், மனிதாபிமானத்தோடும் நடந்து கொள்ளவேண்டும்.

"மக்கள் உயிருக்கு அஞ்சியே சொந்த இடங்களை விட்டு ஓடுகின்றார்கள். அவர்களின் உணர்வுகளை இந்தியா புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளிக்க வேண்டும்."

—இவ்வாறு தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)


# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைப்பொருள்கள், தளபாடங்கள் விற்பனைக்குண்டு. பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்க. க.சி சிவசுப்பிரமணியம், 17/14, அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (சி-3264)

ஒரே பாவனையிலுள்ள யமகா Y-B-80, மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. மரியநேசன், இல: 75, கொழும்புத்துறை வீதி, (வயிரவர் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். (43135)

### கண்டெடுக்கப்பட்டது

காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆசிரியரின் சம்பளக் காசோலை கண்டெடுக்கப்பட்டு பாட்டா ஏஜன்சி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுச் செல்லவும். நிர்வாகி. (8911)

### மணமகன் தேவை

இந்து, கௌரவமான குடும்பம், 32 வயது, உத்தரம் பாவம் 32, உதயத்தில் செவ்வாய், A/L அரச லிகிதருக்கு மணமகன் தேவை. விவாசப் பொருத்தத்துக்கான குறிப்புகள், தகவல்கள் வழங்கும் சேவையில் இணைந்து பொருத்தமான மணமக்களை தேர்ந்தெடுக்கலாம். இல. 03, யாழ்வீதி, யாழ்ப்பாணம். (43120)

இந்து கௌரவமான குடும்பம், 34 வயது, அவிட்டம், உதயத்தில் செவ்வாய், B.Sc. விரிவுரையாளருக்கு மணமகன் தேவை. இல. 03, யாழ்வீதி, யாழ்ப்பாணம். (சிறாம்பியடி, பலாலி, பருத்தித்துறை வீதிகளின் சந்திப்புக்கு அருகில்) (43121)

### தவறிவிட்டது

இராசரத்தினம் சாந்தினி ஆகிய எனது 668421505 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். வி.வி. இராஜரத்தினம், தேர்தல் அலுவலகம், யாழ். கச்சேரி. (43124)

இராசரத்தினம் சுகிர்தாம்பாள் ஆகிய எனது 365051240 X இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், எனது கணவரான முத்துச்சாமி இராசரத்தினம் 352862207 V இலக்கமுடைய கடமை அட்டையும் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். வி.வி. இராஜரத்தினம், தேர்தல் அலுவலகம், யாழ் கச்சேரி. (43125)

### திருமண சேவை

சுவிஸில் வசிக்கும் 28 வயது இந்து, கௌரவமான குடும்பம், பூரட்டாதி நட்சத்திரம், செவ்வாய் தோஷமுண்டு. ஐரோப்பிய நாட்டில் வசிக்கும் தமிழ்ப்பெண் விரும்பத்தக்கது அரச உத்தியோகத்தர்களுக்கு மணப்பெண்கள் தேவை. துர்க்கா திருமண சேவை, நாவலர் - பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். (43109)

### புத்தகம்

கேதார கௌரி விரத மகிமையை விளக்கும் நூல் விற்பனையாகின்றது. தபாலில் பெற விரும்புவோர் ரூபா 12/- அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். நாயகபாலன் புத்தக களஞ்சியம், மானிப்பாய். (43105)

### மணமகள் தேவை

கனடாவில் தொழில் புரியும் நட்சத்திரம் திருவோணம் 3 ஆம் கால், 39 வயதுடைய யாழ். இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு படித்த அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். தொடர்பு: R. செல்வநாயகம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (8912)

# வெளிவந்துள்ளது

## சோடசநாம மஞ்ஜரி (கிரந்தம்)

இந்து ஆலயங்களுக்குரிய பல்வேறு மூர்த்தங்களின் தியான, சோடச நாம (16) அர்ச்சனைத் தொகுப்பு கிடைக்குமிடம்:

I. கி. சதாசிவசர்மா
"கீதாலயம்", மட்டுவில்.

II. கி. சுப்பிரமணியசாஸ்திரிகள்
கடைச்சாமி வீதி, நீராவியடி.

விலை ரூபா 20/-

அத்துடன் "சியாமளா தண்டக"மும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் (43107)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு

# அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் எதிர்வரும் 13 - 10 - 96 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 - 00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடத்தப்படவிருக்கும் சமய அறிவுப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சையை வடமராட்சி மற்றும் தென்மராட்சி மாணவர்களின் நன்மை கருதி பின்வரும் மேலதிக நிலையங்களிலும் நடத்த ஏற்பாடாகியுள்ளது

1. தென்மராட்சி —
அமிர்தாம்பிகை வித்தியாசாலை
2. வடமராட்சி —
வட இந்துமகளிர் கல்லூரி.

(சி-3265) சைவசமய விவகாரக்குழு.

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

(11—10—1996)

செல்வன்

## தனேந்திரன் துரைராஜன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தனேந்திரன் சிவராணி (தயா) தம்பதிகளின் செல்வப் புதல்வன் துரைராஜன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மாமன்மார், மாமிமார் பாட்டாமார், பாட்டிமார், மச்சான்மார், மச்சாள்மார், சற்குணமாமா குடும்பத்தினர், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் ஆகியோர் பல்கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
ச. க். தனேந்திரன்
யாழ். பல்கலைக்கழகம்

(43131)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் இ. ஜெயசிவானந்தன்

(சித்த ஆயுர்வேத கல்லூரி மாணவன் - கைதடி)

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி வி. இராஜதுரை

அவர்களின் அன்புச் சகோதரனின் அகால மறைவு குறித்து அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். இவ்வேளையில் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு நாமும் துயரில் பங்கு கொள்கின்றோம்.

அதிபர் ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

(43137)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 29 — 12 — 1928

உதிர்வு: 23 — 09 — 1995

## அமரர் வைரமுத்து சரவணமுத்து

(வன்னி)

(இளைப்பாறிய எழுது வினைஞர்,
துறைமுக அதிகாரசபை - கொழும்பு)

திதி: 11 - 10 - 1996

முத்து என்ற முத்தான முத்தே
பூமாஞ்சோலையின் பொற்சுடரே
விளையாட்டு வீரனே
கணித மேதையே
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களை மறவோம் என்றும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

விராவோடை-
அல்வாய்.

(89040)

# 41-ம் நாள் நினைவலைகள்



மலர்வு: 01 — 04 — 1948

மறைவு: 01 — 09 — 1996

## திருமதி நடராஜா மீனாம்பிகை

பாசத்தால் வளர்த்த அம்மா - எமை
பாதியிலே பிரிந்ததேனோ!

எம் குல விளக்கின் இறுதிக் கிரியையில் பங்கு கொண்டவர்களுக்கும், நேரிலே ஆறுதல் கூறியவர்களுக்கும் எம் உளங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள்.

புகையிரத வீதி அருகில்,
மல்லாகம்.

(43123)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்.

உதயன்

## தானங்கள் பேசுகின்றன!

அடுத்த வருடத்துக்கான — 1997 ஆம் ஆண்டுக்கான — நாட்டின் வரவு செலவில் 10 ஆயிரத்து 131 கோடி ரூபா துண்டு விழும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பிரகாரம் 1997 ஆம் ஆண்டில் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் 9 ஆயிரத்து 758 கோடி ரூபா. அந்த வருடத்தில் செலவினங்களுக்கு உத்தேசமாக ஒதுக்கப்பட்டிருப்பது 19 ஆயிரத்து 889 கோடி ரூபா. அதனால் துண்டு விழும் தொகை 1! ஆயிரத்து 131 கோடி ரூபா.

இதில் வேடிக்கையானதும் ஆச்சரியத்திற்கு உரியதுமானதும் என்னவெனில் உத்தேச வருமானத்தை விட துண்டு விழும் தொகை அதிகம் என்பதாகும்!

வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யப்படுவதால்தான் நிதிப் பற்றாக்குறை — துண்டு விழுதல் - உண்டாகிறது. ஆனால் துண்டு விழும் தொகை வரவை விட அதிகமானது என்னும்போது இந் நாட்டின் நிதி நிலைமை எந்த அளவுக்கு அதள பாதாளத்துக்குச் சென்றிருக்கிறது என்பதனை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

நாட்டில் சுமார் ஒன்றரைத் தசாப்தங்களாக போர் ஒன்று நடந்துகொண்டிருப்பதால் அதன் பொருண்மியம் மெலிந்து நிதிநிலைமை தேய்ந்துபோய் விட்டதாகப் பொருளியல் நிபுணர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டுவது உண்டு.

ஆனால் வரவை விடத் துண்டு விழும் தொகை கூடுதலானது என்று தானங்கள் இப்போது பயங்கரமான உண்மை நிலையைப் பேசுகின்றன. நாட்டின் வரவு—செலவு இந்தளவுக்கு மிகமிகப்படு மோசமானது என்பது பொருளாதார நிபுணர்களுக்கே அதிர்ச்சியைத் தந்திருக்கும்;

பானையில் இல்லாமல் அகப்பையில் எப்படி வரும்? வருமானம் இல்லாமல், அதனை விடப் பல மடங்கு செலவு செய்வது எப்படி? துண்டு விழும் தொகையைச் சரி செய்வது எங்ஙனம்? மக்கள் மீது நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிப் பளுவைச் சுமத்துவது ஒரு வழி. வெளிநாடுகளிடம் இருந்து—கையேந்தி—கடன் பெறுவது இரண்டாவது வழி.

எத்தனை காலத்துக்கென்றுதான் இலங்கை கடன் படு நாடாக இருக்கப் போகிறது? கடன் பட்டதால் கலங்கும் அவலத்தை எதிர்காலச் சந்ததியிடம் விட்டு விட்டு நிகழ்காலத்தில் ஆட்சி நடத்துவது பெரும் பாதகமானதாகும்.

நாட்டின் பொருளாதாரம் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. தேய்ந்து போகும் அதனை ஓரளவாவது தடுப்பதற்குக் கையிலே மருந்துண்டு. அதுதான் போரை நிறுத்துவது. போரை நிறுத்தினால் செலவினத்தில் மூன்றில் ஒரு பங்கைக் குறைக்கலாம். அவ்வாறு செய்தால் அப்பாவி மக்களுக்கு எத்தனை ஆறுதலாக இருக்கும்;

ஆனால் அதில் விருப்பமின்றி வெளிநாட்டுக் கடன் பெற இரந்து திரிவது பெரும் வெட்கக் கேடாகும். இப்போதும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் 3,000 கோடி ரூபாவை மேலதிக கடனாகவழங்க இணங்கியுள்ளன.

இப்படியே கடனில் நாட்டின் ''வாழ்க்கை'' ஓடினால் இறுதியில் இலங்கை பொருளாதாரத் தற்கொலை செய்யவே நேரிடும். இது குறித்து ஆட்சியாளர்கள் கவலைப்படப் போவதில்லையா?

தூதுக்குழுவினர் ஜானக பெரேராவிடம் தெரிவிப்பு:

# பொருள்களின் விலைகள் குடாநாட்டில் அதிகரிப்பு

## மண்எண்ணெய் விநியோகமும் சீரில்லை

யாழ்ப்பாணம், ஒக். 11

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் அதிக விலையில் விற்பனையாகின்றன. மண்எண்ணெய் விநியோகம் சீராக நடைபெறவில்லை. இதனால் சாதாரணமக்கள் பொருள்களை அதிக விலைக்கு வாங்க வேண்டியுள்ளது.

சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் குழு மேற்கண்டவாறு 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிடம் தெரிவித்தது.

சி. வி. கே. சிவஞானம் தலைமையில் புதனன்று அவரைச் சந்தித்த இக்குழுவில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையின் ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், இணைச்செயலாளர்கள் வணபிதா ஜே.பி.ஈ செல்வராஜா, எஸ், பரமநாதன், துணைத் தலைவர் ரி.எஸ். குமரேசன் பொருளாளர் சிவபாலன். யாழ் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம். தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் ஜெயரத்தினம் உட்பட 17 பேர் அங்கம் வகித்தனர்.

ஊரடங்கு விவகாரம்

யாழ். குடாநாட்டில் ஊரடங்கை அமுல் செய்யும் நேரம் குறித்து முரண்பாடு நிலவுவதாக குழுவினர் எடுத்துக் கூறினர்.

படையினர் ஒலிபெருக்கி மூலமும் உள்ளூர் பத்திரிகை மூலமும் மாலை 7-00 மணி முதல் காலை 6.30 மணி வரையும் ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவித்துள்ளனர் என்றும் — ஆனால் வானொலியில் இரவு 8 மணி முதல் காலை 5 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது என்றும் — குழுவினர் தெரிவித்தனர்.

இந்த நிலைமையை சீராக்க நடவடிக்கை எடுக்குமாறு குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக்கோரிக்கையையிட்டு தாம் நடவடிக்கை எடுப்பதாக மேஜர் ஜெனரல் குழுவினரிடம் தெரிவித்தார்:

ஜானக பெரேராவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் சில கோரிக்கைகள் வருமாறு:

★ பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளைக் கால தாமதமின்றி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, வங்கிகள் மற்றும் விவசாயத் துறையினர் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

★ கடந்த ஜூலை மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சை முடிவுகளை வெளியிட ஆவன செய்ய வேண்டும். (இ-3)

## சஞ்சலங்கள் தீர்வதற்கு சனீஸ்வரனைவழிபடுவோம்

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு கேது, என்னும் நவக்கிரகங்கள்ஆகிய நவ நாயகர்கள் எம் மீதும் ஏனைய ஜீவ ராசிகள் மீதும் ஆதிக்கம் செலுத்திய வண்ணமே இருக்கிறார்கள்.

இவர்களில் சனி பகவானாலேயே நாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக இன்றைய உலகில் பெரும்பாலோர் எண்ணுகின்றார்கள். ஈஸ்வரன் என்ற பெயரால் சனிக்கிரகம் மாத்திரம் அழைக்கப்படுவது அவரது பெருமைக்குச் சான்றாகும்.

சூரியனுக்கும் சயாதேவிக்கும் பிறந்தபிள்ளைதான் சனி பகவான். யமன் இவரது சகோதரன். காகம் இவரது வாகனம். எள், கரும்பு, நீல நிறமணிகள், கருநிறத்துணிகள், கரும்பு உலோகம். நீல நிறப் பூக்கள் எள்ளெண்ணெய் என்பன இவருக்குரிய நிவேதனப் பொருள்கள். அவரும் கறுப்பு; வாகனமும் கறுப்பு; நிவேதனப் பொருள்களும் கறுப்பு.

> புரட்டாதி மாதத்தில் வரும்கடைசிச் சனிக் கிழமை நாளையாகும்.

பன்னிரு இராசிகளுள்ளே மகரம், கும்பம் ஆகிய இராசிகளுக்கு அதிபதியாக அவர் விளங்குகின்றார். தீவினைப் பயன்களைக் கொடுப்பதில் சனிபகவானே முதன்மையானவர் என்ற அச்சம் மக்களிடையே பரவலாகநிலவிவருகின்றது. எனினும் வினைப் பயனுக்கேற்பவே நல்வினை, தீவினை அமைகின்றது. எல்லாக்கிரகங்களுமே தீவினைப் பயனைக் கொடுப்பன சனிக்கிரகமும் அவற்றுள் ஒன்று.

ஆனால் சனி பகவான் இயல்பாகவே இரக்க சுபாவமுடையவர். நோயுற்ற குழந்தைக்கு கசப்பு மருந்தைத் தாய் கொடுத்துக் குணப்படுத்துவது போல் துன்பத்தைத் தந்து இன்பத்தை ஏற்படுத்துபவர் சனிபகவான்.

ஒவ்வொருவருடைய சாதகத்திலும் சனி பகவான் எவ்வாறு இடம் பெற்றிருக்கின்றாரோ, அவ்வாறே அவரது உடலமைப்பிலும் சனிபகவானுக்கு சில அங்கங்கள் உண்டு. கையில் சனிமேடு என்ற ரேகையை சாத்திர நிபுணர்கள் குறிப்பிடுவது இதற்கு நல்ல சான்றாகும்;

ஒருவருடைய வாழ்வில் சனி திசை மூன்று முறை ஏற்படுகின்றது. பொங்கு சனி, மங்கு சனி, மரணச் சனி என்பனவே அவையாம். துக்கம், துன்பம், தொல்லை, பீடை, தண்டனை, இழப்பு என்பன இக் காலப்பகுதிகளில் ஏற்படுகின்றன. இவற்றிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு சனிபகவானைப் பிரீதி செய்ய வேண்டும் கிரக வழிபாடு, கிரக சாந்தி, விரத அனுட்டானம் என்பவற்றால் இவற்றிலிருந்து விடுதலை பெறலாம் புரட்டாதி மாதத்தில் சனிக்கிழமை தோறும் விரதம் அனுஷ்டிப்பதாலும், சனிக்கிரக வழிபாடு சாந்தி, எள்ளெண்ணெய் எரித்தல், தானம் செய்தல் என்பவற்றாலும் சனி பகவானைப் பிரீதி செய்யலாம்.

சனி பகவானது உள்ளம் மகிழ்ந்தால் எம்மை உலகரசாள வைப்பார். இதற்கு மாறாக அவர் கோபமுற்றால் எத்தகைய வரையும் விள்ளரும் துன்பத்தில் வீழ்த்தி விடுவார். இதனால்தான் சனீஸ்வரனைப் போல கொடுப்பாருமில்லை கெடுப்பாருமில்லை எனக் கூறப்பட்டது எனவே அவரை ஏற்றிப் போற்றி வாழ்வது எமது கடமையாகும்.

தமிழ் நாட்டில் திருநள்ளாறு என்னும் இடத்தில் சனீஸ்வரனுக்குத் திருத்தலம் உள்ளது. நளமகாராசன் சனிக்கிரக தோஷத்திலிருந்து விடுபட வழிபட்டு அருள் பெற்ற திருத்தலம் இதுவாகும். இலங்கையில் பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலும், வண்ணை வரதராஜப் பெருமாள் கோயிலும், வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலும் சனி வழிபாட்டுக்கு ஏற்ற அருள் நிறை தலங்களாக விளங்குகின்றன.

பிணி நீங்கி, வாழ்வு நனி சிறக்க கறுப்புத் துணியில் எள்ளுப் பொட்டலம் எரித்து சனீஸ்வரனை வேண்டுதல் செய்வோம்.

சஞ்சலம் தீர்க்கும்
சனி பகவானே!
மங்களம் பொங்க
மனம் வைத்தருள்வாய்!
சச்சரவின்றி
சாகா நெறியில்
[illegible]
இன்னருள் புரிவாய்!

—வாசுகி சிவராமலிங்கம்

### ஞானக்கதிர்

## ஓய்வூதிய வவுச்சர்கள்

கொழும்புத்துறை, ஒக் 11

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்குரிய இம் மாத வவுச்சர்கள் அவரவர் விலாசத்துக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஓய்வூதியம் சம்பந்தமாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ். பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-30)

## நினைவு தினம் அனுஷ்டிப்பு

வலி. தென்மேற்கு- ஒக். 11

விடுதலைப்புலிகள் அமைப்பின் பெண் போராளிகளில் முதலில் மரணித்த மாலதியின் நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை வலி. தென். மேற்குப் பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

முக்கிய வீதிகள், சந்திகளில் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டு ஒலிபெருக்கியில் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-145)

### நாளை

புரட்டாதி 26
சனிக்கிழமை
திதி: அமாவாசை முன்னிரவு 8. 03 வரை.
நட்சத்திரம்: அத்தம். பிற்பகல் 4. 14 வரை.
அமாவாசை விரதம்
ராகுகாலம்: 9.02—10 32
சுபநேரம்: 3.02—4.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

சமய நிகழ்வுகளில்

கொழும்புத்துறை ஒக் 11

நல்லூர் சிவன் கோயிலில் சாரதா நவராத்திரி பூசையை முன்னிட்டு இன்று காலை 7 மணிக்கு ஸ்ரீமத் பகவத்கீதா ஹோமமும், மாலை 3 மணிக்கு சண்டீ கும்ப பூசையும் இடம் பெறும். (அ-30)

★ ★ ★

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். (அ-30)

## நவராத்திரி ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 11

நவராத்திரி விரதம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி இம்மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை விஜயதசமியுடன் நிறைவுறும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அம்மன் ஆலயங்களிலும், அம்மன் விக்கிரகம் உள்ள ஏனைய ஆலயங்களிலும் ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட பூசை வழிபாடுகளுடன் நவராத்திரி விழா ஆரம்பமாகும்.

விஜயதசமியன்று பாடசாலைகளில் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வுகள் நடைபெறும். (அ-30-111)

பத்திரிகை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காண அரசு முயற்சி எடுத்து வருகிறது. எனவே அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற எண்ணத்தை நாட்டு மக்கள் மனதிலும் உருவாக்கவேண்டும். ஆனால் யுத்தத்தைப் பற்றியே பேசப்படுகிறது. யுத்தம் பற்றிய உண்மை நிலையை மக்களுக்குத் தெரிவித்திருந்தால் அமைதியை உருவாக்குவது தொடர்பாக மக்களின் ஈடுபாட்டைப் பெறுவது தற்போதுள்ளதைவிட இலகுவாக இருக்கும். இது ஒரு விடயம்.

மற்றொன்று, சிறிலங்காவில் இடம்பெறும் யுத்தத்தால் புதுமையான ஒரு நிலை உருவாகியுள்ளது.

ஸ்ரீலங்கா ஒரு ஜனநாயக நாடு. பல்வேறு சிவில் நடவடிக்கைகள் சிவில் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் யுத்தம் பற்றிய செய்திகளை சிவில் நிர்வாகிகள் வெளியிடுவதில்லை. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவமே யுத்தம் தொடர்பான தகவல்களை வழங்குகிறது. அதுவும் சம்பவங்கள் இடம்பெற்ற மறுதினமே இவை வழங்கப்படுகின்றன. செய்தியாளர்கள் சம்பவங்கள் இடம்பெறும் இடங்களுக்குச் செல்லமுடியாது.

எனவே பத்திரிகையாளர் சுதந்திரமாகச் செய்திகளை வெளியிட முடியாதுள்ளது. மேலும் ஒரு தரப்புச் செய்தியே வழங்கப்படுகிறது.

ஒரு சம்பவம் இடம்பெற்றால் அதுபற்றி எல்லோரும் அறிவர். உதாரணமாக 5 அல்லது 10 போராளிகள் கொல்லப்பட்டால் அதன் ஐந்து அல்லது பத்து மடங்கு அதிகரித்துக் கூறப்படுகிறது. அண்மையில் சில மாதங்களாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக வெளியான தகவல்களை ஒட்டுமொத்தமாக கூட்டிப்பார்த்தால் இவ்வளவு தொகையான உறுப்பினர்கள் அந்த அமைப்பில் இருந்தனரா? என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுகிறது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நாளை போலியோ சொட்டு மருந்து

## முன்னைய நிலையங்களிலேயே இம்முறையும்

யாழ்ப்பாணம், ஒக். 11

ஐந்து வயதுக்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து கொடுக்கும் நாள் நாளை ஆகும்.

சர்வதேச றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் யுனிசெவ் மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து இந்தப் போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இந்த சொட்டு மருந்து வழங்கிய அதே நிலையங்களில் நாளை இந்தசொட்டு மருந்து வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் 6சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைப் பிரிவுகளிலும் அமைக்கப்பட்டுள்ள 103 விசேட நிலையங்களில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை சொட்டு மருந்து வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த தடவை சொட்டு மருந்தைப் பெற்றுக்கொண்ட நிலையங்களுக்கு நேரத்துக்கு வந்து சொட்டு மருந்தைப் பெறுமாறு சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

சுமார் 50ஆயிரம் குழந்தைகளுக்கு இந்த சொட்டுமருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

(இ-3-15-173)

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினசாமி சிவஞானசுந்தரம்

(ஆயுர்வேத வைத்தியர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இரத்தினசாமி சிவஞானசுந்தரம் 26-09 96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினசாமி — ஆத்தாட்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், ப்ரபன், காலஞ்சென்ற அசோகன், ஜயந்தன், அனுஜன், ஜகேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரசுந்தரம், கார்மேகசுந்தரம், நிர்த்தனசுந்தரம், கணேசசுந்தரம், ஞானாம்பிகை, பாஸ்கரசுந்தரம், விஜயாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சட்டத்தரணி நடேசன், பொன்னுச்சாமி, மகேஸ்வரி, இலட்சுமிதேவி, சுந்தரி, சுசீலாதேவி, நிமலேந்திரராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 27-09-96 அன்று வவுனிக்குளத்தில் நடைபெற்றன, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
இ. நிர்த்தனசுந்தரம்

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(43136)

### மனுவேற்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை

(இராசையா)

கூழாவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை முனையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கூழாவடி ஆனைக்கோட்டையில் வசித்தவருமாகிய மனுவேற்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை (இராசையா) 09-10-96 அன்று இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற சந்தானா (செல்லம்மா)வின் அன்புக் கணவரும், அன்ரனி மரியநாயகம் (திருகோணமலை), அருட்சகோதரி மேரி நோபேட் (திருக்குடும்பக் கன்னியர்மடம், முழங்காவில்), செல்வராணி, செல்வமகள், தவராசசிங்கம் (இத்தாலி), காலஞ்சென்ற நவரட்ணம், குணரட்ணம் (கனடா) ஆகியோரது பாசமிகு தந்தையும், செபமாலையம்மா (தங்கம்), மதுரநாயகம் (ரெயிலர்), இமானுவேல் (பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம்), றெஜீனா (தங்கா), உதயம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் (போயிட்டி), பாக்கியம் (போயிட்டி), காலஞ்சென்ற செல்வராசா, தங்கரத்தினம், யேசுரட்ணம் (மானிப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 10 - 10 - 96 அன்று மாலை 4.00 மணிக்கு ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

• தகவல்:
செ. மரியதாஸ்
(மருமகன்)

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

(43132)

### இராமநாதர் கந்தையா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையை வாழ்விடமாகவும் கொண்ட இராமநாதர் கந்தையா அவர்கள் நேற்று (10-10-96) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-10-96) பகல் 1-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி அன்னலட்சுமி கந்தையா
(மகள்)
பிரதி அதிபர்,
யாழ். பெரியபுலம் ம வி

17, சேர்பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(3269)

## கைதானோரில் அனேகர் விடுவிப்பு

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் கடந்த செவ்வாய்க் கிழமை காலை நடத்தப்பட்ட 6மணி நேரதேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 20பேரில் அனேகமானவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்தாதவர்கள் மட்டும் விசாரிக்கப்படுகிறார்கள்.

அதே சமயம் கொழும்புக்குள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து—

முப்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் படையினரின் லீவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சந்தேகத்துக்கு இடமான நபர்கள் மற்றும் வாகனங்களின் நடமாட்டம் குறித்து தகவல் தருமாறு அவர் கேட்டுள்ளார். (இ-3)

### பொலீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் கிடைக்காதுபோகவே பாதுகாப்புப் படையினர் சுமார் 30 நிமிடங்களின் பின்னரே அந்த இடத்துக்கு வந்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அன்று இரவு வீதியால் சென்ற தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

சிலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு தினங்களாக பொலீஸாராலும் காடையர்களாலும் தமிழர்கள் தாக்கப்பட்டிருப்பதாக ஈ. பி. டி. பி நாடாளுமன்ற உறுப்பினரான ரமேஸ் நடராசா பி. பி ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஈ. பி டி. பி ஜனாதிபதியைக் கோர உள்ளது.

இதே சமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செங்கலடியில் ரெலோ உறுப்பினர்களின் ஆயுதங்கள் திருப்பிப் பெறப்பட்டுள்ளன என்று மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

(இ-3-10)

### தமிழ்க்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தா .

வன்முறை வெடிக்கலாம் என்று அஞ்சப்பட்டதால் பாடசாலைகள், கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன

இந்த ஊர்வலம் நடந்து முடிந்த பின்னர் நகரின் மத்தியில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் இதனால் பதற்றம் அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-10)

## இராணுவ தினமான நேற்று நோயாளருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 11

இலங்கை இராணுவத்தின் 47 ஆவது வருடப் பூர்த்தியை ஒட்டி, நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்களுக்கு உடுபுடைவைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் இராணுவப் படையணியின் பிரிகேடியர் ஜெயசுந்தரா இந்த அன்பளிப்புகளை வழங்கினார்.

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள சகல வார்ட்டுகளுக்கும் சென்று ஒவ்வொரு நோயாளிக்கும் உடுபுடைவைகளை பிரிகேடியர் வழங்கினார்.

இதேவேளை —

இராணுவ தினத்தையொட்டி வடமராட்சியில் இராணுவத்தினரின் பத்து மைல் ஓட்டப்போட்டி நேற்று நடைபெற்றது.

வல்வெட்டித்துறையில் ஆரம்பித்த இப்போட்டி பருத்தித்துறையில் முடிவுற்றது.

பருத்தித்துறை இராணுவப் படையணியினால் நடத்தப்பட்ட இப்போட்டியில் கணிசமான எண்ணிக்கையில் இராணுவத்தினர் பங்குபற்றினர்.

(அ- 15- 173)

## பிச்சைக்காரர் கைது

கொழும்பு, ஒக். 11

பிச்சைக்காரர் வேடத்தில் புலிகள் தலைநகரிலும், புற நகரங்களிலும் வேவு நடவடிக்கைளில் ஈடுபட்டு வருவதாகக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து—

வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த புதன்கிழமை சுமார் 50 க்கும் மேற்பட்ட பிச்சைக்காரர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தீவிர விசாரணையின் பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் புலிச் சந்தேக நபர்கள் எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### நரசிம்மராவ்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்பட்டார்.

25 ஆயிரம் ரூபாவுக்கு பிணைப் பத்திரமும் அதே தொகைக்கு பிணை உறுதிப் பத்திரமும் அளித்ததன் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார்.

உயர் நீதிமன்றம் நரசிம்மராவுக்கு இம் மாதம் 14 ஆம் திகதிவரை முன் பிணை வழங்கியுள்ளது. (இ-10)

### புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் என்று—

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது குறித்து அளவுக்கு அதிகமாகப் பேசப்படுவதாகவே நான் நினைக்கின்றேன்.

தங்கள் நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்காமைக்கு, விடுதலைப் புலிகளை இலங்கை அரசு தடை செய்யாமல் இருப்பது தான் காரணம் என்று வெளிநாட்டு அரசு எதுவும் எம்மிடம் தெரிவிக்கவில்லை.

இத்தகைய ஒரு சூழ் நிலையில், இறுதி முடிவு ஒன்றுக்கு வருவதோ அல்லது மேற்கொள்ளும் முடிவை மாற்றக் கூடியதாக்காமற் செய்வதோ நல்லதல்ல.

இயக்கம் ஒன்றைத் தடை செய்வதால், எல்லாக் காலத்திலும் அதனுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியாது என்று கட்டுப்பாடு விதிப்பதாகாது; நிராகரிப்பதாகாது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் அரசாங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்திய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அது வழக்கமற்ற ஒன்றுமல்ல.

எனவே விடுதலைப் புலிகளைத் தடை செய்தால் பேச்சு நடத்த முடியாதே என்ற அம்சம் தடை செய்வதற்கு முட்டுக்கட்டையல்ல

எனினும் தடை குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை — என்றார். (அ)

## உத்தரப் பிரதேச தேர்தல் நிலைமை

புதுடில்லி, ஒக். 11

உத்தரப் பிரதேச மாநில தேர்தல் முடிவுகளின்படி எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலை தோன்றியுள்ளது.

424 அங்கத்தவர்களைக் கொண்ட சட்ட சபைக்கான தேர்தலில் இதுவரை அறிவிக்கப்பட்ட 385 இடங்களில் பாரதீய ஜனதாக் கட்சி 159 இடங்களையும் பிரதமர் தேவகௌடாவின் ஐக்கிய முன்னணி 118 இடங்களையும் தாழ்த்தப்பட்ட மக்களின் பகுஜன் சமாஜ் மற்றும் காங்கிரஸ் கூட்டணி 95 இடங்களையும் சுயேச்சை வேட்பாளர்களும் மற்றக்கட்சிகளும் 16 இடங்களையும் பெற்றுள்ளன. (இ-10)

### அடையாளம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அவ்விரு சடலங்கள் குறித்த அடையாளங்களை பொலீஸார் அறிவித்துள்ளனர்.

★ பச்சை நிற நீளக்காற் சட்டை, சாம்பல் நிற ரீ ஷேர்ட், கறுப்புப் பட்டி அணிந்துள்ளார். சிறிய மீசையுடையவர்; பொது நிறம். 5அடி 1அங்குலம் உயரமுடையவர். இருபத்தொரு வயது மதிக்கத்தக்க நடுத்தர உடலமைப்பு உடையவர்.

★ மண்ணிற நீளக்காற் சட்டை, நீல நிறத்தில் கறுப்பு புள்ளி போட்ட ஷேர்ட், பட்டி அணிந்தவர், முடி ஒட்ட வெட்டி உள்ளார். வெள்ளை நிறமானவர். 5அடி 3அங்குலம் உயரம். 24வயது மதிக்கத்தக்க நடுத்தர உடல் அமைப்பு உடையவர். (இ-3)

### எமது பணிமனை—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவையாவும் திட்டமிட்ட செயல்களாகும். பொலீஸாரே கிரனைட்டை வீசி, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். ஆனால் எமது கட்சியைச் சேர்ந்த ஒருவரே சுட்டுக்கொண்டு பணிமனைக்குள் சென்றார் என தற்போது கூறுகின்றனர் எங்களது வாழ்க்கையை முடிக்கும் ஒரு வேலையை நாங்கள் செய்வதில்லை.

அர்த்தமற்ற இந்தச் செயல்கள் ஏதோ ஒரு திட்டத்துக்கமைய மேற்கொள்ளப்படுகிறது என்பதே எனது கருத்தாகும்.

எல்லோரும் விடுதலைப் புலிகள் என்ற நோக்கில்தான் சிலர் செயற்பட்டு வருகிறார்கள் என நாங்கள் தொடர்ந்து கூறி வந்துள்ளோம். ஆனால் இன்று தமிழ்க் கட்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகள் என்ற எண்ணத்தில் அவர்கள் செயற்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்களுக்கு அரசியல் கட்சிகள் ஏதும் பின்னணியில் செயற்படுகின்றதா என என்னால் தற்போது கூற முடியாமலுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-10-1996 [illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org